இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb. 1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 04 | திகதி : 05.03.2023 | விலை : 50.00

# "பற்றாக்குறையல்ல பகிராக்குறையே இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக்காரணம்"

## தவக்காலச் சுற்றுமடலில் யாழ் ஆயர்


இன்று உலகத்தில் பற்றாக்குறையல்ல பகிராக் குறையே நிலவுகின்றது. இந்தப் பகிராக்குறையே இன்று எமது நாட்டில் பல ஏற்றத்தாழ்வுகளுக்கும், உணவுப்பற்றாக் குறைகளுக்கும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் காரணமாக அமைகின்றது. எனவே எம்மிடம் உள்ளவற்றை இயன்றளவு தேவையில் உள்ளவர்களோடு பகிர்ந்து வாழ, இத் திருவருகைக்காலத்தில் நாம் அனைவரும் அழைக்கப்படுகின்றோம்.

"உன் முழு இதயத்துடன் என்னிடம் திரும்பி வா" (யோவேல் 2:12) என்னும் இறைவனின் குரலுக்கு நாம் ஒவ்வொருவரும் இப் பரிசுத்த தவக்காலத்தில் எம் வாழ்வால் பதில் கூறவேண்டியவர்களாய் உள்ளோம். "திரும்பி வா" என்ற அழைப் பினை இந்தத் தவக்காலத்தில் மூன்று நிலைகளில் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

முதலாவதாக எம்மை நாமே திரும்பிப் பார்ப்போம் (Return to Ourselves). இரண்டாவ தாக, இறைவனிடம் திரும்புதல் (Return to God). மூன்றாவதாக, "எம் அயலவரிடம் திரும்பி வருவோம் (Return to Others)". **ஆயரின் முழுமையான சுற்று மடலை பக்கம் 3 இல் காண்க**



## சிறப்புற நடைபெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா



கச்சதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத்தல வருடாந்தத் திருவிழா கடந்த 04ஆம் திகதி மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியைக் கொழும்பு மறைமாவட்டத் துணை ஆயர் பேரருட்கலாநிதி அன்ரன் ரஞ்சித் புள்ளைநாயகம் ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.

கடந்த 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் வழிபாடுகள் ஆரம்பமாகி, திருச்செபமாலை, சிலுவைப்பாதைத் தியானம், தொடர்ந்து நற்கருணை வழிபாடும், புனி தரின் திருச்சுரூபப் பவனியும் இடம்பெற்று காலை திருநாள் திருப்பலியும் இடம்பெற்றது.

இவ்வழிபாடுகளில் இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து ஐயாயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து வழிபாடுகளில் பக்தியுடன் பங்குபற்றினார்கள்.

## நிரந்தர வதிவிடப் பயிற்சியை நிறைவுசெய்த மறையாசிரியர்கள்



யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தால் நடாத்தப்பட்ட மறையாசிரியர் வதிவிடப்பயிற்சியை நிறைவு செய்த மறையாசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் இல்ல சிற்றாலயத்தில் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் சிறப்புத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் மறைக்கல்வி நிலையக் கேட்போர் கூடத்தில் இயக்குனர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து மறையாசிரியர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிவைத்தார். அத்துடன் இந்நிகழ்வில் திண்டிவனம் தமிழக ஆயர்பேரவையின் மறைக்கல்விப் பணிக்குழுப் பொதுச் செயலர் அருட்தந்தை ஜோர்ச் சின்னப்பன் அடிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## எதிர்க் கட்சித்தலைவர் யாழ். ஆயர் சந்திப்பு



யாழ். குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்கள் கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்ட கையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடி நிலை குறித்தும் அதை எதிர்காலத் திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

## அமதிகளின் புதிய மாகாணத் தலைவரும் ஆலோசகர்களும்



யாழ். மாகாண அமலமரித் தியாகிகள் சபையின் புதிய மாகாணத் தலைவராக அண்மையில் நியமனம் பெற்ற அருட் தந்தை ஜெயந்தன் பச்சேக் அடிகள் கடந்த 17ஆம் திகதி தனது பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

தொடர்பக சிற்றாலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக் அடிகள் பணிப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட இந்நிகழ்வில் கொழும்பு மாகாண அமலமரித் தியாகிகள் சபை முதல்வர் அருட்தந்தை றொசான் சில்வா, யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகள் மற்றும் திருக்குடும்ப யாழ். மாகாணத் தலைவி அருட் சகோதரி தியோபின் குரூஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். ☞ 11

## எமது எண்ணம்

### பதின்மூன்றைக்கூட விரும்பாத நிலையில் தீர்வு சாத்தியமா?

2002 இல் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், "மாற்றுக் கருத்து" என்பதை அரசாங்கத்தின் பக்கமாக அல்லது இலங்கை அரசு என்ற கட்டமைப்புடன் ஒத்துப் போகக்கூடிய முறையில், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக வடக்குக் கிழக்கில் புகுத்திய அமெரிக்க - இந்திய அரசுகள், 2009 இற்குப் பின்னரான சூழலில் நல்லிணக்கம், நடைமுறைச் சாத்தியமானதைச் சிந்தித்தல், மனித உரிமைப் பாதுகாப்பு போன்ற சொல்லாடல்களைப் புகுத்தித் தமிழ்த்தேசியக் கோட்பாட்டைச் சிதைக்க முற்பட்டு வருகின்றனர் என்பது பட்டவர்த்தனம்.

தமிழ்த்தேசியக் கட்சிகளும் மக்களில் சிலரும் அந்தக் கருத்துக்களை அதிகமாகவே உள்வாங்கிவிட்டனர். இருந்தாலும் அந்த அரசியல் பின்னணியின் ஆபத்துக்களை அவர்கள் அறியாதவர்களும் அல்ல.

ஆனால் இலங்கைச் சிங்கள மக்களிடம் மேற்படி சொல்லாடல்களை அமெரிக்க - இந்திய அரசுகள் நிதி வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் விற்பனை செய்ய முடியவில்லை. பதின்மூன்றுக்கு எதிரான சிங்கள அரசியல்வாதிகள், பௌத்த குருமாரின் கருத்து வெளிப்பாடுகள் அதனை எடுத்துக் கூறுகின்றன.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது கொழும்பில் இந்தியத் தூதுவராகப் பதவி வகித்திருந்த ஜே.என்.டிக்சிற், 1998 இல் எழுதிய அசேய்மன்ற் கொழும்பு (**Assignment Colombo**) என்ற நூலில் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் அரசியல் பிடிவாதம் பற்றி விபரித்திருக்கிறார்.

குறிப்பாக வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசம் (North East Tamil Homeland) என்று ஒப்பந்தத்தில் குறிப்பிட ஜே.ஆர் விரும்பில்லை என்றும் இதனால் வரலாற்று வாழ்விடங்கள் (Historic Habitats) என்ற சொல்லைப் பயன்படுத்தியதாகவும் விபரிக்கிறார்.

ஆகவே புரிந்துகொள்ளக் கூடியது என்னவென்றால், பௌத்த பிக்குமாரைத் திருப்திப்படுத்தாமல் இலங்கைத் தீவில் எந்த ஒரு அரசியல் தீர்வும் சாத்தியம் இல்லை என்பதே.

பதின்மூன்றுக்கு எதிராகக் கொழும்பில் நடைபெற்ற பௌத்த குருமாரின் போராட்டம் இந்திய எதிர்ப்பின் உண்மை யைப் பகிரங்கப்படுத்தியுள்ளது. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் சிங்கள மக்கள் சீனாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்ததமை குறைவு. ஆனால் இந்தியாவுக்கு எதிராகச் செய்த போராட்டங்கள் அதிகம்.

ஆனால்இந்தியாஎப்போதுமே,அதாவதுஇந்திரா காந்தி காலத்தில் இருந்து இலங்கை அரசாங்கத்தைத் திருப்திப்படுத்தி வருகின்றது. பதின்மூன்றுக்கு எதிராகக் கடந்தவாரம்கொழும்பில்இடம்பெற்றபௌத்தபிக்குமாரின் போராட்டம் இலங்கை அரசாங்கத்தை அல்ல இந்தியாவையே கேள்விக்கு உட்படுத்தியிருக்கின்றது.

இதனை இன்னமும் ஏன் இந்தியா புரிந்துகொள்ளவில்லை என்பதே ஈழத்தமிழர்களின் கேள்வியும் கவலையும்.

மாகாணசபையும்அதற்குரிய பதின்மூன்றாவது திருத்தச் சட்டமும் வடக்குக் கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரமே உரியது. ஆனால் ஜே.ஆரின் பிடிவாதத்தினால் இலங்கைத்தீவு முழுவதும் ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மாகாண சபைகள் முறை அமுல்படுத்தப்பட்டதைத் தமிழ்த் தலைவர்களிடம் டிக்சிற் அன்று சுட்டிக்காட்டியிருந்ததாகவும் ஒரு தகவல் உண்டு.

ஆகவே சிங்கள மக்களின் குறிப்பாக பௌத்த குருமாரின் மனநிலை என்பது இன்றுவரை மாறாத ஒன்று. ஆனாலும் இந்தியா இன்றுவரையும் ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாகக் கொழும்புடன் நேரடியாக உறவைப் பேணி வருகின்றமை தமிழ் மக்களுக்குக் கவலை தருவதாகவே உள்ளது.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# "அன்புள்ள ஆரியசிங்க" மும்மொழி நூல்கள் வெளியீடு



அருட்தந்தை அன்புராசா அவர்களின் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட "அன்புள்ள ஆரியசிங்க" நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த 27ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. யாழ் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந் தினர் களாக யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகயாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ. சற்குணராஜா யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், யாழ மாகாண அமலமரித்தியாகிகள் சபை முதல்வர் அருட்தந்தைபோல்ஜெயந்தன்பச்சேக், கோப்பாய்ஞான வழி அருட்தந்தை செல்வரட்ணம், யாழ். போதனா வைத் தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி நளாயினி ஜெயதீசன், கவிஞரும் சமூக செயற்பாட்டாளருமாகிய திரு கருணாகரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமாகி இலங்கையின் தென்பகுதியை பரபரப்பாக்கிய வெகுஜனப் போராட்டத்தின் பின்னணியில் தென்னிலங்கையின் ஒரு போராட்டக் கார நண்பனுக்கு எழுதப்பட்ட கடிதங்களின் தொகுப்பாக இந் நூல் அமைந்துள்ளதுடன் தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தைத் தென்னிலங்கை மக்களுக்கு மட்டுமல்லாது முழு உலகிற்கும் எடுத்துச் சொல்வதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

# 'மலையில் சுரந்த மருந்து' சிலுவைப்பாதைத் தியான நூல் வெளியீடு

அருட்தந்தை தயாகரன் அவர்களின் "மலையில் சுரந்த மருந்து" தவக்காலச் சிலுவைப்பாதை தியான நூல் வெளியீட்டு நிகழ்வு 28ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது.

மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலய இளையோர்களின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பேணாட் றெக்னோ அவர்கள் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அன்ரன் அமலதாஸ் சிறப்பு விருந்தினராகவும், கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி அதிபர் அருட் சகோதரி றொசாரி அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததுடன் யாழ் திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் நூலுக்கான நயப்புரையினை வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் குருக்கள், துறவிகள் பங்குமக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



### 128ம் ஆண்டு விழாக் காணும்

# பாலைதீவு புனித அந்தோனியார் தவக்கால திருத்தல திருவிழா - 2023

பாலைதீவு புனித அந்தோனியார் தவக்காலத் திருயாத்திரைத்திருத்தலத்திருவிழாவிற்குஅனைவரையும் பெரும் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம். இந்த வருடத் திருவிழா எதிர்வரும் 08.03.2023 புதன் மாலை கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி11.03.2023சனிக்கிழமை காலைத் திருப்பலியுடன் நிறைவுபெறும்.

08.03.2023 புதன்கிழமை மாலை 5.00 மணிக்குத் திருச்செபமாலையும், திருச்சிலுவைப்பாதைத் தியானமும், கொடியேற்றமும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.

09.03.2023 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்குத் திருச்செபமாலையும், திருச்சிலுவைப்பாதைத் தியானமும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.

10.03.2023 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்குக் கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி சகாயநாயகம் அடிகளார் தலைமையில் சிலுவைப்பாதையும், திருப்பலியும், நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

11.03.2023 சனிக்கிழமை காலை 5.00 மணிக்கு முதல் திருப்பலியும், காலை 6.45 மணிக்கு யாழ் மறைமாவட்டக்குருமுதல்வர்அருட்பணிப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் திருவிழாத் திருப்பலியும், புனிதரின் பவனியும், திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும்.


**யாத்திரிகர்களின் கனிவான கவனத்திற்கு:-**

கடல் வழிப்பயணத்தின் போது அனைவரும் பாதுகாப்புக் கவசங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

சிறிய படகுகளில் ஒன்பது 09 பேருக்குக் குறைவானவர்களே பயணிக்க வேண்டும்.

ஞாயிறு (12.03.2023) மதியம் 12.00 மணிக்குள் தீவிலிருந்து தம் சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட வேண்டும். அதன் பின்னர் யாரும் தீவில் நிற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

அருட்பணி அன்ரனிதாஸ் லியாண்ஸ்
பரிபாலகர்
புனித அந்தோனியார் திருத்தலம் பாலைதீவு.



# 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் முதல்நிலையில்

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயப் பங்கைச் சேர்ந்தவரும், புனித டொன்பொஸ்கோ வித்தியாலய மாணவனுமாகிய செல்வன் ஸ்ரனிஸ் ஜெலீபன் ஜதுஷிகன் தரம் - 05ம் புலமைப் பரிசில் பரீட்சையில் 191 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

அகில இலங்கை ரீதியாகத் தமிழ்மொழி மூலமாக தோற்றியவர்களில் இவரே உயர்வான புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ். மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் தவக்காலச் சுற்றுமடல்



## கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே!

**கிறிஸ்து இயேசுவின் அன்புமிகு இறைமக்களே!**

எமது நெற்றியிலே சாம்பலால் திருச்சிலுவை அடையாளம் வரைந்து இந்த தபக்காலத்தை ஆரம்பித் திருக்கின்றோம். நெற்றியில் பூசப்பட்ட சாம்பலானது 'மனி தனே நீ மண்ணாய் இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்பு வாய்' என்று எமது நிலையற்ற வாழ்வின் நிலையினை யும் 'மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்' என்று எமது வாழ்வில் ஏற்பட வேண்டிய மனமாற்றத்தினையும் எடுத்துக் காட்டி நிற்கின்றது. எனவே நிலையான இயேசுவிடம் நம்பிக்கை கொண்டு திரும்பி வரவேண்டும் என்கின்ற அழைப்பினை விபூதிப் புதன் திருச்சடங்கு வழியுறுத்து கின்றது.

தபக்காலம் ஒரு அருளின் காலம். இறைவன் தரும் அருளினை நிறைவாக பெற்றுக்கொள்ள எமது செப, தப, ஒறுத்தல் முயற்சிகளில் வெளிவேடங்களை தவிர்த்துக் கொள்ளுதல் எமக்கு விடுக்கப்படுகின்ற அடிப்படை அழைப் பாக இருக்கின்றது. 'மிகச்சிறியோராகிய என் சகோதர சகோ தரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்'. (மத்தேயு 25: 40) என்ற இயேசுவின் வார்த்தைக்கேற்ப ஒரு படிநிலை மேலே சென்று பிறருக்கு நன்மை செய்வதே எமக்கு தரப்படுகின்ற சிறப்பான அழைப் பாக இருக்கின்றது. இன்று உலகத்தில் பற்றாக்குறையல்ல பகிராக்குறையே நிலவுகின்றது. இந்தப் பகிராக்குறையே இன்று எமது நாட்டில் பல ஏற்றத்தாழ்வுகளுக் கும், உணவுப்பற்றாகுறைகளுக்கும், பொருளாதார நெருக் கடிகளுக்கும் காரணமாக அமைகின்றது. எனவே எம் மிடம் உள்ளவற்றை இயன்றளவு தேவையில் உள்ள வர்களோடு பகிர்ந்து வாழ, பகிர்ந்து வாழும் திருஅவை யாக எமது பங்குத் திருஅவைகள் செயல்பட அழைப்பு விடுக்கப்படுகின்றது.

"உன் முழு இதயத்துடன் என்னிடம் திரும்பி வா" (யோவேல் 2:12) என்னும் இறைவனின் குரலுக்கு நாம் ஒவ்வொருவரும் இப் பரிசுத்த தவக்காலத்தில் எம் வாழ்வால் பதில் கூறவேண்டியவர்களாய் உள்ளோம். "திரும்பி வா" என்ற அழைப்பினை இந்த தபக்காலத்தில் மூன்று நிலைகளில் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

முதலாவதாக எம்மை நாமே திரும்பி பார்ப்போம் (Return to Ourselves). எனது கடந்த கால, நிகழ்கால, எதிர்கால வாழ்வின் நிலை என்ன? அதில் நான் இப்போது எங்கு நிற்கின்றேன் என்று என்னை நானே திரும்பி பார்த்து தன்னிலை உணர்ந்து கொள்ளுகின்ற ஒரு காலமாக இந்த தபக்காலத்தில் நாம் பயணிக்க அழைக்கப்படுகின்றோம். எம் மட்டில் நாம் கொண்டுள்ள உயர் மதிப்பீடுகளைக் குறைத்து, எமது மனித பலவீனங்களைக் களைந்து, இறை வனுடன் ஒப்புரவாக வேண்டும். எமது ஆன்ம ஈடேற்றத் துக்கு முக்கியமாக தேவையானவற்றைத் தேடுவதே எம் வாழ்வாக வேண்டும். எமக்குள் உள்ள தீயனவற்றைக் களைந்து தூய ஆவியின் தீ எம்மில் பற்றி ஒளிரச் செய்யவேண்டும்.

இரண்டாவதாக, இறைவனிடம் திரும்புதல் (Return to God). இறைவன் ஒருவரே நம் கடவுள். நாம் அவரின் கைவேலைப்பாடுகள். "ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன்". (திருப்பாடல் 16: 8) என்று திருப்பாடல் ஆசிரியர் கூறுவது போல இறைவனை எப்போதும் எம் வாழ்வில் முதன்மைப்படுத்துவோம். பல விதமான வேலைப்பளுக்கள், தீவினைகள், நெருக்கடிகள், உறவுநிலையில் விரிசல்கள் நிறைந்த சூழலில் நாம் வாழ்ந்தாலும் புனித பவுல் அடிகளார் கூறுவதை போல இவை கிறிஸ்துவின் அன்பிலிருந்து எம்மை பிரித்துவிட ஒருபோதும் அனுமதிக்கலாகாது. எனவே கூடுதலான நேரங்களை தனிப்பட்ட குடும்ப, குழும செபத்திற்கு செல விடுவோமாக. நாம் மேற்கொள்ளுகின்ற பக்தி முயற்சி களில் அர்த்தமுள்ளமுறையில் பங்கெடுத்து கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளை சிந்தித்து அவரோடு ஒன்றி ணைய முயலுவோமாக

மூன்றாவதாக, "எம் அயலவரிடம் திரும்பி வரு வோம் (Return to Others)". எமக்குள்ளே நிலவுகின்ற போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவுகள், மன்னிக்கமுடி யாத நிலமைகள், அன்பு செய்யமுடியாத சந்தர்ப்பங்கள் ஆகியவற்றை விட்டுவிடுவோம். "நீங்கள் உங்கள் காணிக் கையைப் பலிப்பீடத்தில் செலுத்தவரும்போது உங்கள் சகோதரர், சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல ஏதோ மனத்தாங்கல் உண்டு என அங்கே நினைவுற்றால் அங் கேயே பலிப்பீடத்தின் முன் உங்கள் காணிக்கையை விட்டு விட்டு போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். (மத்தேயு 5:23-24) என்ற இயேசுவின் அழைப்புக்கு செவிமடுத்து இறைவன் எம் குற்றங்களை மன்னிப்பதுபோல நாமும் எமக்கு அடுத்து இருப்பவர்கள் செய்யும் குறை குற்றங்களை மன்னித்து எம் சகோதர சகோதரிகளிடம் இயேசுவின் விலைமதிப்பற்ற அன்பைப் பகிர்ந்து வாழ்வோம்.

எம் நாட்டின் இன்றைய அரசியல் நிலையை நாம் நன்கு அறிவோம். ஜனநாயகம் அற்ற அரசியல்வாதிகளும், அரசியல் நிலைப்பாடும் தலை விரித்தாடுகின்றது. நாட்டில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் ஒருவேளை உணவுக்கே அவதியுறுகின்றனர். மருத்துவமனைகளிலே மருந்துகள் இல்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலை. வேலையிழப்போர் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது, விவசாயம் பாதிப்புற்றுள்ளது. தொழிற்சாலைகள் மூலப்பொருட்கள் இன்றி மூடப்படு கின்றன. இதைவிட மேலாக இந்தக் கஷ்டமான நிலை களை அரசிற்கு உணர்த்த முனைபவர்கள் அரச படைக-ளினால் அடக்கப்படுவதும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதும் வருந்தத்தக்கதாகவுள்ளது.

மக்கள் தேர்தலை எதிர்பார்க்கின்றனர். அரசி யலில் மாற்றத்தை விரும்புகின்றனர். அரசாங்கமோ தேர்தலை நடாத்தும் எண்ணம் அற்றுச் செயற்படுவது மிக மனவேதனைக்குரியது. எம் நாடு அரசியல், பொருளாதார நிலையில் இருந்து மீள நாம் ஒருமித்து நம்பிக்கையோடு இறைவேண்டல் செய்வோமாக. துன்பங்களில் துவண் டாலும் இப் பரிசுத்த நாட்களில் அருளப்படும் இறையருளை நிறைவாகப் பெற கிறிஸ்துவின் சிலுவையில் எம் சிந்தனைகளை ஒருமைப்படுத்துவோம்.

இத் தவக்காலத்தில் நாம் திரும்பி வருவோம்! திருந்தி வருவோம்!! திரும்பவும் வருவோம்!!!

உயிர்த்த இயேசுவின் விடுதலை வாழ்வு எம் நாட்டிற்கும், எம் மறைமாவட்டத்தின் இறைமக்களாகிய உங்கள் ஒவ்வொருவரின் குடும்பங்களுக்கும் கிடைக்க இறையாசீர் வழங்கி நிற்கின்றேன்.

*கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள,*

**பேரருட்கலாநிதி**
**யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**யாழ். மறைமாவட்ட ஆயர்**

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*– அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

21

(சென்றவாரத் தொடர்ச்சி..)



### அத்தியாயம் 9

### சமாளிக்கும் கிறிஸ்தவத்தைப் புதுப்பிக்கத் தமிழ் விடுதலை இறையியல் தோன்ற வேண்டும்

**9.2 2ஆம் வத். சங்கத்தில் தென் அமெரிக்க ஆயர்களின் தாக்கமும் விடுதலை இறையியல் தொடக்கமும்.**

இஸ்ரவேலருக்கு விடுதலையையும் மனித குலத்திற்கு இரட்சணியத்தையும் கொடுத்த இயேசுவின் நற்செய்தியிலிருந்தே கிறிஸ்தவம் தொடங்கியது. ஆனால் உரோமையின் தலைமைத் துவத்தின் கீழ் வளர்ந்த திருஅவை அமைப்பு, இறைவன் தம்மை இஸ்ரவேல் மக்களின் விடுதலை யில் வெளிப்படுத்தியதை மறந்தவர்களாகச், செயற்பட்டது.

ஆனால் வத்திக்கான் சங்க காலத்திலேயே, தென் அமெரிக்க ஆயர்கள் தமது நாட்டு நிலைமைகளையும் பிரச்சினைகளையும் சங்கத்திற்கு வந்த முற்போக் கான ஆயர்களுக்கும் இறையியலாளருக்கும் விளக்கியிருந்தனர். இவைகளைச் சங்க பிதாக்க ளும் இறையியலாளரும் கவனத்தில் எடுத்தனர். இவைகள் சங்கம் நடந்துகொண்டிருக் கும் பொழுது பிறந்த ஏடுகளிலே தெளிவாக பிரதிபலிக்கின்றன. இத்துடன் சங்கம் முடிவதற்கு முன்பதாகவே, 1965ஆம் ஆண்டில், 40க்கு மேற்பட்ட ஆயர்கள் உரோமை கற்றகூம் **(Catecomb)** என்று அழைக்கப்படும் 1ஆம் நூற். கிறிஸ்தவர்கள் மறைவாக வாழ்ந்த இடத்திற்குச் சென்று, ஆயர்கள் தாங்கள் வறுமையில் வாழ்வோம், மக்களுக்காக வாழ் வோம் என ஒப்பந்தம் ( Catecomb-Pact) செய்து, தாங்கள் வத். சங்கத்துடன் சேர்ந்து, வறியவர்களின் திரு அவைகளாகச் செயற்படுவோம் என்று உடன்படிக்கை செய்தனர்.

(2015 ஆம் ஆண்டு, 50 ஆண்டுகளின் பின் மீளவும் இவர்களில் சிலர் உரோமையில் கூடி ஒப்பந்தத்தை நினைவு கூர்ந்த மகாநாட்டில், உரை நிகழ்த்தும்படி என்னை அழைத்திருந்தனர். நான் 2ஆம் வத். சங்கத்தில் நேரடிப் பார்வையாளனாக இருந்த அனுபவங்களையும், ஓர் ஆசிய இறையியலாளரும் என்ற வகையில், கருத்துகளை அங்கு வழங்கினேன்.)

(தொடரும்...)

## 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

### ஐந்தாம் கட்டளை

**236. ஐந்தாம் கட்டளை எது?** கொலை செய்யாதே.

**237. ஐந்தாம் கட்டளை எவற்றைத் தடைசெய்கிறது?**

ஐந்தாம் கட்டளையானது அனைத்து அறிவுக்குட்பட்ட கொலைகள், சண்டைகள், சச்சரவுகள், மற்றவருக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சொற்கள் அத்தோடு ஒழுக்கப் பிழையான முன்மாதிரிகை என்பவற்றைத் தடைசெய்கிறது.

**238. கோபத்தை ஐந்தாம் கட்டளை தடைசெய்கிறதா?**

ஆம். ஐந்தாம் கட்டளை கோபத்தைத் தடைசெய்கிறது. அத்தோடு வெறுப்பையும் பழிவாங்குதலையும் தடுக்கிறது.

**239. ஏன் கூடா ஒழுக்கத்தையும் பிழையான முன்மாதிரி கையையும் ஐந்தாம் கட்டளை தடைசெய்கிறது?**

கூடா ஒழுக்கம், பிழையான முன்மாதிரிகை என்ப வற்றை ஐந்தாம் கட்டளை தடைசெய்கிறது. ஏனெனில் அவை வன்முறைக்கும் எமது அயலாரின் ஆன்மாவின் ஆன்மீக இறப்பிற்கும் இட்டுச் செல்கிறது.

### ஆறாம் கட்டளை

**240. ஆறாம் கட்டளை என்ன?** விபச்சாரம் செய்யாதே.

**241. ஆறாம் கட்டளை எவற்றையெல்லாம் தடைசெய்கின்றது?**

ஆம். ஆறாம் கட்டளையானது இன்னொருவருடைய மனைவியோடு அல்லது கணவ-ரோடு கொண்டிருக்கும் தூய்மையற்ற பாவங்களைத் தடைசெய்கிறது. கற்பிற்கெதிரான அனைத்துப் பாவங்களையும் தடை செய்கிறது.

**242. தூய்மையான வாழ்விற்கெதிரானவற்றை ஆறாம் கட்டளை தடை செய்கிறதா?**

ஆம், ஆறாம் கட்டளையானது எமது பார்வைகள், சொற்கள், செயல்கள், போன்ற வற்றால் தூய வாழ்விற்கு எதிராக நாங்கள் செய்கிற செயல்களைத் தடைசெய்கிறது.

**243. கட்டுக்கோப்பில்லாத நடிப்புகள் நாடகங்களை ஆறாம் கட்டளை தடைசெய்கிறதா?**

கட்டுக்கோப்பில்லாத நடனங்களும் நடிப்புக்களும் ஆறாம் கட்டளையால் தடை செய்யப்பட்டுள்ளன. எனவே இவற்றைப் பார்ப்பது பாவமாகும்.

**244. ஆபாசப் பாடல்கள், புத்தகங்கள், படங்களை ஆறாம் கட்டளை தடைசெய்கிறதா?**

ஆறாம் கட்டளையானது ஆபாசப் பாடல்கள், படங்கள், புத்தகங்களைத் தடைசெய்கிறது. இவை ஆன்மாக்களை சாவான பாவத்திற்கு இட்டுச்செல்லக் கூடியவை.

(தொடரும்...)

# தவக்காலத்தில் பாவ வாழ்வில் இருந்து விடுபடுவோம்



அளவையூர் அமலன்

**முகவுரை**

இறைவன் தமது வார்த்தை வல்லமையால் ஒன்றும் இல்லாமையில் இருந்து இவ்வுலகைப் படைத்தார். என்பதைத் தொடக்க நூலில் காணுகின்றோம். உலகிற்குத் தேவையான அனைத்தையும் படைத்த பின் தனது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் புனிதமாகப் படைத்துத் தனது உயிர் மூச்சையும் அருளையும் கொடுத்தார். தான் புனிதமாக இருப்பது போல பரிசுத்தராக விளங்குவது போல மனிதன் வாழ வேண்டும் என்று விரும்பினார். ஈற்றில் மண்ணால் படைக்கப்பட்டவன் அதே புனித நிலையில் மண்ணுக்கே திரும்பித் தன்னிடம் வர வேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அந்த எண்ணம் அலகையின் சூழ்ச்சியால் கானல் நீராக மாறுகின்றது. ஆதிப்பெற்றோரின் முதல் பாவத்தால் மனுக்குலம் முழுவதும் இறைவனிடமிருந்து வெகுதூரம் சென்றதோடு இறைவனின் அருளுயிரையும் இழந்து போவதை நாம் காணுகின்றோம். எனவே தான் நாம் பாவ வாழ்வில் இருந்து விடுபடவும் இறைவனிடம் திரும்பிவரவும் தவக்காலம் எமக்குத் தரப்படுகின்றது.

**இறைவனின் இரக்கமே, இறைமகன் இயேசு.**

தான் அன்பு செய்த தனது அருளை நிறைவாகப் பெற்ற தனது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் அழிந்து போவதையும் நிலைவாழ்வை இழப்பதையும் விரும்பாத இறைவன் பரிவிரக்கத்தோடு மீட்புத்திட்டத்தை வகுக்கின்றார். எமது ஆதிப்பெற்றோருக்கு ஒரு மீட்பரை அனுப்புவதாக வாக்குக் கொடுத்தவர் தன் ஒரே மகனை மீட்பராக அனுப்புகின்றார். இறைவனின் மாபெரும் இரக்கத்தின் கொடையே இறைமகன் இயேசு. அவர் இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து எமக்கு மீட்பைப் பெற்றுத் தர வானகத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுகின்றார். கிறிஸ்து பட்ட பாடுகளையும், துன்பங்களையும், புனிதமாகச் சிந்திப்பதே தவக்காலம் ஆகும். "அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம்" (யோவான் 6:39) வானகத் தந்தையின் திருவுளம் தான் கிறிஸ்துவின் சிலுவை மரணம். அம்மரணம் தான் எமக்கு மீட்பைப் பெற்றுத்தந்தது.

**கிறிஸ்துவின் முன்மாதிரிகை**

பாவம் கொடுமையானது. அனைத்துத் தீமைகளும் எம்மை முடிவில்லாத தண்டனைக்கு உட்படுத்தும். நாம் பாவம் செய்யக்கூடாது பாவச் சோதனைகளை மேற்கொள்ளச் செபத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்பதை இறைமகன் இயேசு எமக்குக் காட்டியிருக்கின்றார். இயேசுவின் பாலைவன அனுபவம் அலகை அவரை சோதித்த காலம் எல்லாம் எமக்குச் சிறந்த படிப்பினையாக உள்ளது (லூக் 4:1-13) நாம் பெலவீனமாக இருக்கும் போது உலக ஆசாபாசங்களுக்கு அடிமைப்படுகின்றபோது ஊனியல்பின் இச்சைகளுக்கு எம்மை விட்டுக் கொடுக்கும் போது அலகை எம்மை ஆட்கொள்கின்றான். அலகையின் சிறைப்படுத்தலில் இருந்து நாம் வெளியேவர செபத்திற்கு முன்னுரிமை கொடுப்போம். தவக்காலம் அருளின் காலம். இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் ஆழமாக உணரும் காலம். இறைவன் நம் இதயக் கதவுகளைத் தட்டி எமது இதயத்தில் வாசம் செய்ய எம்மை நெருங்கி வரும் காலம். எனவேஇப்பொன்னான வாய்ப்பை நழுவ விடாமல் கிறிஸ்துவைப் போல பாவச்சோதனைகளை வெற்றி கொள்வோம்.

**வற்றாத நீருற்றே இறைவனின் இரக்கம்**

இறைவன் பரிவிரக்கத்தின் பெரும் பொக்கிஷமாக இருக்கின்றார். இரக்கத்தோடும் அன்போடும் நீடிய பொறுமையோடும் எமது மனமாற்றத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றார். பாவிகளான எம்மைத் தண்டிப்பதற்குக் காலம் தாழ்த்துகின்றார். எம்மைச் சந்திக்கவும் எம்மை ஏற்றுக் கொள்ளவும் வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருக்கின்றார். நாம் ஆவலோடு இயேசுவைச் சந்திக்கும் போது நாம் மனம்மாற அருமையான வாய்ப்புக் கிடைக்கின்றது. குட்டையாக இருந்த சக்கேயு அனைத்துத் தடைகளையும் தாண்டி ஆவலோடு இயேசுவைச் சந்தித்த பொழுது இறைவனின் இரக்கத்தை நிறைவாகப் பெற்று பாவ மன்னிப்படைந்து புதுமனிதனாக மாறுகின்றான் (லூக் 19:1-10) விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் அவர் முன் நிறுத்தப்பட்ட போது இயேசுவின் இரக்கமும் அன்பும் அவளுக்குப் பாவமன்னிப்பையும் விடுதலையையும் கொடுத்தது.(யோவான் 8:1-11) பாவியான பெண் இயேசுவை அண்டி வந்து அழுது புலம்பி அவர் பாதங்களைக் கண்ணீரால் கழுவிய போது இரக்கத்தோடு பாவங்களை மன்னித்து புது வாழ்வுக்குள் அனுப்பி வைக்கின்றார். (லூக் 7:36-43) நாமும் இக்காலத்தில் கிறிஸ்துவைச் சந்திப்போம். தடையாக இருக்கும் அனைத்துக் காரணிகளையும் தகர்ப்போம். புதுமனிதர்களாக மாறுவோம்.

**நிறைவாக**

"இப்பொழுதாவது உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம் இதயத்தைக் கிழித்துக் கொண்டு வாருங்கள்" (யோவேல் 2:12-13) என்ற இறைவாக்கினர் யோவேலின் அழைப்பு இன்று எமக்கு விடுக்கப்படுகின்றது. இது உண்மையான, மனமாற்றத்திற்கான, புனித வாழ்வுக்கான, இறைவனோடு எமது உறவை ஆரோக்கியமானதாக மாற்றுவதற்கான வாய்ப்பு என்பதை உணர்ந்து கொள்ளுவோம். தவக்காலத்தில் நாம் செய்யும் நோன்பு, செபம், தானதருமம், பக்தி முயற்சிகள், தவக்கால யாத்திரிகைகள் எல்லாம் எம்மிலே உண்மையான முழுமையான மனமாற்றத்தை ஏற்படுத்தி எம்மைப் புதுப்பிக்க வேண்டும் என்று இறையருள் வேண்டுவோம். நாம் எதிர்கொள்ளும் பாஸ்காவிழா அர்த்தம் பெற புதுவாழ்வை ஆரம்பிப்போம். ●

---

# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்



## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி. யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

**திருவிவிலியப் பயன்பாடு**

ஆயினும் இந்தியப் பதிப்பைவிட இவை விலை கூடிக்காணப்பட்டதோடு, இறைவார்த்தையின் முக்கியத்துவத்தை அக்காலக் குடும்பங்கள் உணர்ந்திருக்காதது பெருங்குறையாகும். அத்தோடு இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளின் தமிழ்மொழி பெயர்ப்பு 1967இலேயே முதன்முதலில் வெளிவந்தது. திருவிவிலிய, திருவழிபாட்டு, மறைக்கல்வி, மறையறிவு, பக்தி முயற்சிகள் சார்ந்த விளக்கக் கட்டுரை நூல்களும், இந்தியா சென்று இவரது முயற்சியால் பயிற்சி பெற்றுக்கொண்ட நிரந்தர மறைப்போதகர்களால் திரும்பி வந்தவேளை கொண்டு வரப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.

ஆயினும் மறையறிவைப் பொறுத்த வரை மறைக்கல்வி நிலையம் செயலுருப் பெறாமையும், கத்தோலிக்க ஆசிரியர்கள் சங்கம் மற்றும் தன்னார்வ மறையாசிரியர்கள் உருவாகாமையும் இவரது காலத்தில் முன்னேற்றம் பெற வேண்டியிருந்த நிலமைகளாகும்.

**ஒன்றிப்பும் உரையாடலும்**

கத்தோலிக்க மறையானது ஏனைய கிறிஸ்தவ சபைகளுடன் ஒன்றிப்பையும், ஏனைய சமயங்களுடன் உரையாடலையும், ஏற்படுத்துவது தொடர்பாக 02ஆம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பிருந்தே இவர் முயற்சிகளை எடுத்திருந்தார். ஏனெனில் கிறிஸ்தவ மதம், பல்வேறு பிளவுகள் முரண்பாடுகள், கொள்கை வேறுபாடுகளுடன் இறக்குமதி செய்யப்பட்ட மதமாக ஏனையோரால் ஏளனத்துடனும் சந்தேகத்துடனும் நோக்கப்பட்ட அவ்வேளை, அருட்பணியாளர்கள், துறவியர் பொது நிலையினரை இவர், கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடல் பற்றி விழிப்புணர்வு கொண்டு செயற்பாட்டில் இறங்கும்படி உணர்த்தி ஊக்குவித்திருந்தார். போர்த் துக்கேயர் காலத்தில் இருந்து ஊட்டப்பட்ட, ஏனைய மதங்கள் எல்லாம் சாத்தானின் வேதங்கள், கத்தோலிக்கமே சத்திய வேதம் என்ற தனிச்சமைய முதல்வாதக் கொள்கையால், எப்பக்கத்தாலும் புரிந்து கொள்ளப்படாத தன்மைகள் மத்தியிலும், எம்மறையையும் தன்னுள் உள்வாங்கும் தமிழ்ப் பண்பாட்டின் பொதுமைப் பண்பையும், தமிழ்ப்பண்பாட்டைத் தமக்கே சொந்தமாக்கிக்கொண்ட யாழ்ப்பாணச் சைவ மற்றும் சிங்களப் பண்பாட்டைத் தமக்கே உரியதாக்கிக் கொண்ட தென்னிலங்கைப் பௌத்த, மற்றும் தமக்கெனத் தனித்துவமான மதத்துடன் இன்றியமையாதபடி பிரிக்கமுடியாத பண்பாட்டைக் கொண்ட இஸ்லாம் ஆகிய சமயங்களின்தனித்துவப் பண்பையும் வேறுபடுத்தி உணர்ந்து இவற்றோடு கத்தோலிக்கர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய உறவுபற்றி விளங்கி யும் விளக்கியும் செயற்பட்டிருந்தார். ஏற்றுக் கொள்ளப்படாத வேளைகளில் காலம் வரும்வரை காத்திருந்தார்.

**கிறிஸ்தவ சபைகளுடன் ஒன்றிப்பு**

சமூக, மருத்துவ, கல்வி, பொதுப் பணிகளை விட நேரடியாக நற்செய்தியை அறிவிப்பதையே தமது நோக்கமாகக் கொண்டு வெளிப்படையான எதிர்பார்ப்புகள் மத்தியிலும் மறைநூலை அதீத அடிப்படைவாத நோக்கில் விளக்கியுரைத்து. மக்களை மனம் மாற்றுவதையே முழுநேர வேலையாகக் கொண்ட ஏராளமான அடிப்படைவாதக் குழுக்களைவிடத் தென்னிந்தியத் திருச்சபை, ஆங்கிலேயத் திருச்சபை, மெதடிஸ்த சபை போன்ற கத்தோலிக்கத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களால் உருவான பிரிவினைவாதச் சபைகளுடன் ஒன்றிப்பை ஏற்படுத்துவதே இவரின் பணியாக இருந்தது.

வளலாயில் இருந்த தமது ஓய்வு இல்லத்தில் மன ஆறுதல் பெறுவதற்காக இரவு வேளைகளில் இவர் சென்று தனிமையில் தங்குவதுண்டு. இவருக்கும் ஏனைய கிறிஸ்தவத் தலைவர்களுக்குமிடையே இருந்த உறவு நிலை பற்றி அருட்சகோதரர்களில் ஒருவராக வளலாயில் இவரால் பயிற்சி பெற்ற அருட்தந்தை ஜோ.இ. ஜெயசீலன் கூறும் போது,"யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சபைகளைப் பொறுத்த மட்டில் சங்கத்திற்கு முன்பே மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் (பின்னர் உலகத் திருச்சபைச் சம்மேளன உபதலைவர்) வண. D.T. நைல்ஸ் உடன் ஆயருக்கு ஆழமான நட்பும் சகவாசமும் (கூட்டுறவும்) இருந்தன.

*(தொடரும்...)*

அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

---




## யாழ் திருத்தூது முதல்வராக ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. (1868-1883) கோயம்புத்தூரில் மறைபணியாளராகப் பணி

**அமலமரித்தியாகிகள் சபையினர் இலங்கையில் முன்னெடுத்த முதல் பங்கு மகாஞானொடுக்கம்**

அதேவேளையில் புதிதாக ஐரோப்பாவிலிருந்து வந்திறங்கும் மறைப்பணியாளர்களுக்குத் தமிழும் கற்பித்தார். இவ்வாறு இவரிடம் அமல மரித்தியாகிகள் சபை அருட் பணியாளர்களாகிய குறே (Gouret) அடிகள், பூசின் (Pouzin) அடிகள், லெலோன் (Lelons) அடிகள், லெகாம் (Le Cam) அடிகள், குறோசெல் (Crousel) அடிகள், குடோன் (Gourdon) அடிகள், சலாவுன் (Salaun) அடிகள், ஆகியோரும் அருட்சகோதர்கள் பிறவுண் (Brown) அடிகள், பெனற் (Bennet) அடிகள், ஆகியோரும் தமிழ் கற்றனர்.

காப்பகத்தில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்த வண்ணமிருந்தமையால் திருப்பாலத்துவ சபையினரின் பண உதவியுடன் கொழும்புத்துறையில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள ஒரு அழகிய 14 ஏக்கர் நிலப்பரப்புள்ள இடத்தைக் கொள்வனவு செய்தார். 1863ம் ஆண்டு திருக்குடும்பக் கன்னியர் சபையினர் பெண்பிள்ளைகளைத் தமது பிரதான வீதியிலுள்ள மடத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆண்பிள்ளைகள் காப்பகத்தின் நிறுவுநரும் இயக்குநருமாகிய பொன்ஜீன் அடிகளால் கொழும்புத்துறையில் கொள்வனவு செய்யபட்ட புதிய வளாகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அத்துடன் இந்தக் காப்பகத்தை நிர்வகிப்பதற்கும் இங்கு வரும் பிள்ளைகளுக்கு கல்விபுகட்டி உருவாக்குவதற்கும் அத்துடன் யாழ் திருத்துமாவட்டத்தில் உள்ள மறைத்தளங்களில் மறையாசிரியர்களாக இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்கும் சுதேச இளைஞர்களைக் கொண்டு புனித சூசையப்பரின் பாதுகாவலில் 1864ம் ஆண்டு ஒரு துறவற சபையை ஏற்படுத்தினார். அதேபோல சுதேச இளம் பெண்களுக்காக 1865ம் ஆண்டு புனித இராயப்பரின் பாதுகாவலில் ஒரு பெண்கள் துறவற சபையையும் ஏற்படுத்தினார்.

(தொடரும்...)

அருட்பணி S.V.B. மங்களராஜா

# போர்க்காலப் பாடுகளைப் பேசும் ஈழத்து திரைப்படம்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட்ட இயக்குநர் மதிசுதாவின் வெந்து தணிந்தது காடு என்ற திரைப்படம் ஏற்படுத்தியிருக்கின்ற அதிர்வலைகளை இக்கட்டுரை பகிர்ந்து கொள்ள முற்படுகின்றது. இன்று உலகம் முழுவதும் மிகவும் சக்திவாய்ந்த ஒரு தொழில்நுட்பக் கலைவடிவமாகக் காணப்படுவது சினிமா. அது திரை அரங்கு என்ற அதன் அடிப்படை இருள் வெளியில் மட்டுமன்றி தொலைக்காட்சி, கணணி, கைத்தொலைபேசி எனத் தனது நிகழ் வெளியினை அகலப்படுத்திய வடிவம். இன்று தொழில்நுட்பங்களின் உச்சமான பயன்பாடுகளால் ஆச்சரியத்தினையும் பிரமிப்பினையும் தோற்றுவிக்கின்ற வடிவமாகவும் பல கோடி ரூபா நிதிகளைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற மிகப் பெரிய வணிகமார்க்கமாகவும் மாறியிருக்கின்ற சூழலில் ஈழத்தின் திரைப்பட வரலாற்றினை எடுத்து நோக்கும் போது அறுபது எழுபதுகளில் சில தமிழ்த் திரைப்படங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும், போராட்ட காலத்தில் உருவாக்கப்பட்டிருந்தாலும் ஈழத்துக்கான சினிமா என்ற அடையாளத்தினைப் பிரதி பலித்த திரைப்படங்கள் மிகவும் குறைவு என்று தான் கூற வேண்டும்.

தென்னிந்திய சினிமாவின் நகல்களாகவே பெரும்பாலானவை அமைந்தன. அண்மைக் காலங்களில் எமது இளையோர்கள் பலர் தென்னிந்தியச் சினிமாவைப் பின்பற்றிப் பாடல் காட்சிகளையும் குறுந்திரைகளையும் பெரும் நிதிச் செலவளிப்புக்களில் உருவாக்கி வெறும் குப்பைகளையே சினிமா என்று தயாரிக்க முற்படுகின்றனர். இந்தப் பின்னணியில் நோக்கும் போது அண்மையில் இலங்கையில் திரையிடப்பட்ட கைபேசியில் தயாரிக்கப்பட்ட வெந்து தணிந்தது காடு ஒரு வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படமாக உயர்ந்து நிற்கின்றது.

### உணர்வுகளால் பேசுதல்

திரைப்படத்தினைப் பார்க்கத் தொடங்கிய போது அதன் களமும் சூழலும் எப்படியான ஒரு திரைப்படமாக அமையப்போகிறதோ என்ற எண்ண அலை எழுந்து அடங்கு முன்னமே அது பார்ப்போரைக் காட்சிகளால் கவர்ந்து உணர்வுகளுடன் மிக நெருக்கமாகிப் பார்ப்பவர்களை அழைத்து கொண்டு செல்லத் தொடங்குகின்றது. ஒரு கணமும் அதில் இருந்து விலக முடியாத வகையில் உணர்ச்சியாலும் உண்மையான யதார்த்த வாழ்வின் காட்சிக் கூறுகளினாலும் ஒலிக்கலவைகளினாலும் பார்ப்பவரைக் கட்டி வைத்துக் கண்ணீர் சிந்த வைக்கின்றது. கடந்து வந்து விட்ட 14 வருடங்களுக்குப் பின்னால் கொண்டு சென்று உணர்வலைகளினால்உச்சியில் ஓங்கி அடித்து எமது இனத்தின் பாடுகளின் கதையைச் சொல்கின்றது. இறுதியுத்த நாட்களின் அடையாளமாக இடம்பெயர்ந்து ஒரு காணியில் மூன்று கொட்டில்களைப் போட்டுக்கொண்டு ஒரு தாயை மையப்படுத்தியிருந்த கூட்டுக் குடும்பத்தின் கதையே காட்சியாகப் பரிணமிக்கின்றது. பல இடங்களில் இடம் பெயர்ந்து இறுதியாக அந்த இடத்தில் தறப்பாள்களால் கொட்டில் அமைத்து அந்தக்குடும்பம் அங்கு வாழ்கின்றது. விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் பயங்கரங்களையெல்லாம் ஒலிகளால் உள்வாங்கிக் கொண்டு வாழ்தலின் கூறுகளைப் படம் பிரதி பலிக்கின்றது.

கால் நடக்கமுடியாது இருக்கின்ற தாய் அந்தத் தாயை மதிப்போடு நடத்துகின்ற பிள்ளைகள், அவர்களின் பிள்ளைகள் எனச் சூழ இருந்த அந்தக் கூட்டுக் குடும்பக் கூட்டுக்குள் நாட்டில் வீசிய யுத்த சூறாவளி அவர்களை அல்லல் படுத்துவதும் அதனை அவர்கள் எதிர் கொள்ளப் போராடுவதும் விளைவுகளும் எனத்தொடரும் திரைப்படம் இரத்தமும் சதையுமாக இறுதி யுத்தகாலப் பகுதியில் பல்லாயிரம் குடும்பங்கள் எதிர்கொண்ட சூறாவளியின் வெட்டுமுகத்தினைப் பொதுமக்கள் பக்கமாக நின்று தரிசிக்கச் செய்கின்றது. பார்ப்போரின் மனங்களை வெந்து தணியாத உணர்வுடன் வெளியேற வைக்கின்றது.




### காட்சி வெளி

திரைப்படம் என்பது கமராவினால் வரையப்படும் கவிதை என்பார்கள். அந்தளவுக்குத் திரைப்படத்தின் பிரதானமான மூலம் கமரா என்ற தொழில்நுட்பம். இந்தத் திரைப்படமானது முழுக்க முழுக்கக் கைபேசியில் (ஐபோனில்) எடுக்கப்பட்டு சாதனை புரிந்துள்ளது. பார்ப்பவருக்கு அது ஐபோனின் விழிகளால் பார்க்கப்படுகின்றது என்பது மறந்துபோகும் அளவுக்கு இயக்குநரால் அதன் தொழில்நுட்பம் கன கச்சிதமாகக் கையாளப்பட்டுள்ளது.

இத்திரைப்படத்தின் காட்சிக்களமானது வன்னியில் உள்ள ஒரு வெறுங் காணியில் அமைக்கப்பட்ட மூன்று கொட்டில்கள், பாதுகாப்பு பங்கர்கள், அந்தக்காணிக்கான பாதை முகப்பு வெளி என்பவற்றை மட்டும் கொண்டிருக்கக் கூடிய வரையறுக்கப்பட்ட அந்த காட்சி வெளியில் சூரிய உதயத்தினைக் காட்டுவதில் இருந்து ஆரம்பிக்கும் திரைப்படம் அந்தக்கூட்டுக் குடும்பத்தின் இயக்கம் அவர்கள் ஒன்றிணைந்து உணவு உட்கொள்ளும் முற்றம், அந்த தறப்பாள் மூடிய சிறிய வீட்டில் எரிகின்ற அடுப்பு, மாமரத்துக்கருகில் போடப்பட்ட தென்னங்குத்தி, அவர்கள் அமைக்கின்ற பங்கர் என்ற வரையறுக்கப்பட்ட வெளிகளுக்குள்ளேயே முழுக்காட்சியும் ஆக்கப்பட்டிருந்தது. ஆனால் பங்கர் என்ற குறுகிய இடத்திற்குள் அதிக நேரம் கழிகின்றது. அந்த பங்கரே தகிக்கும் உணர்வுகளின் கூடாரமும் ஆகி எந்த சலிப்பையும் தராத வகையில் அந்த வெளியும் நேரமும் பார்ப்போரை ஈர்க்கும் அளவுக்கு அந்த வெளி இயக்குநரால் மிகச்சிறப்பான கலைத்துவ வெளியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### பாத்திரப் படைப்பு

கலைப்படைப்பின் முக்கியமாக அமைக்கின்ற பாத்திர உருவாக்கம் இத்திரைப்படத்தில் மிகச்சிறப்பாக அமைந்து நிற்கின்றது. தாய் பாத்திரத்தினை மையப்படுத்திய இத்திரைப்படத்தில் பார்வதி அம்மா பாத்திரம் மிகவும் பொருத்தமான தெரிவு எந்த மிகையும் இல்லாது இயல்பான நடிப்பினால் அப்பாத்திரத்தினை அவர் காவிச்செல்கின்றார். அதுமட்டுமன்றி அவரது மகன்களாக வருபவர்கள் மகள்களாக வருபவர்கள் பேரப்பிள்ளைகளாக வருபவர்கள் போராளிப் பேரன் பேத்திகள், அயலில் குடியேறுபவர்கள்,அந்தரித்து வருபவர்கள் என இங்கு வருகின்ற ஒவ்வொரு பாத்திரங்களும் மிகச்சிறப்பாக ஒப்பனையற்ற உண்மை உருக்களாக யதார்த்தமாகத் திரைப்படத்தில் வாழ்கின்றார்கள். பாத்திரத் தெரிவும் அவர்களின் நடிப்புச் சித்திரிப்பும் மிக மிக இயல்பானதாக அந்தக் காலச் சூழலின் ஆபத்தினை வெளிப்படுத்துவதிலும், உறவுகளைக் கொண்டாடுவதிலும்,காதல் புரிவதிலும், நகைச்சுவையை வெளிப்படுத்துவதிலும் துயரத்தினை சித்திரிப்பதிலும் மிக மிக இயல்பானவையாக வாழ்ந்துள்ளன. திரைப்பட வெற்றியில் பாத்திரத் தெரிவும் நடிப்பும் முக்கிய இடம்பெறுகின்றது.

### படைப்பின் பேசுபொருள்

திரைப்படத்தின் பேசு பொருளானது 'போர் பொல்லாதது அது யாருக்கும் எந்த மக்கள் குழுமத்திற்கும் வரக்கூடாது" என்ற வெளிப்படையான செய்தியைச் சொல்லுகின்றது. உலகில் பல நாடுகளில் நடைபெற்ற யுத்த வரலாறு எடுத்துச் சொல்லலுடனேயே படம் ஆரம்பிக்கின்றது. இது உலகப்பொதுவான செய்தி. அதனாலேயே இத்திரைப்படம் வெளிநாடுகளிலில் பல விருதுகளைப் பெற்றது. ஆனால் அதற்கு அப்பால் திரைப்படத்திற்குள்ளால் ஈழத்தமிழர்களின் போராட்ட வாழ்வில் அவர்கள் இழந்து போனவைகள், செய்த தியாகங்கள் மற்றவருக்கு உதவுதல் நிவாரணப் பொருட்களுடன் உண்ணும் உணவில் எளிமை, விறகுவெட்டி விற்று வாழ்வைக்கொண்டு நடத்தல், உதவி கேட்டு வருபவர்களுக்கு உதவுதல், மண்ணோடு சேர்ந்து இயங்குதல், பிறர்சிநேகம், என இம்மண்ணின் மக்களிடம் இருந்த உயரிய வாழ்க்கை முறை, குறிப்பாக போர்க்காலத்திலும் அது குறைவுபடாத தன்மை, விடுதலை வாழ்வுக்காகச் செய்த உண்மையான உயர்வான தியாகங்கள் என இத்திரைப்படம் தொட்டுச்செல்லும் பல செய்திகளும் மண்ணையும் மக்களையும் நேசிக்கும்

காவலூர் யோவான்

மன நிலையும், உயிர் போகும் நிலையிலும் கொண்ட கொள்கையில் கொண்டிருக்கும் உறுதியையும் அதற்காகவே இறுதி வரை நிற்கின்ற மன்பாங்கினையும் சொல்லாமல் சொல்லும் ஒரு மக்கள் குழுமத்தின் வரலாற்றுச் சாட்சியாக வெந்து தணிந்தது காடு அமைகின்றது.

### ஒலிக்கலவை

காட்சிகளோடு ஒலிகளையும் காண்பியமாக்கிய பெருமையை திரைப்படம் கொள்ளுகின்றது. வாகனச் சத்தங்கள், அம்புலன்ஸ் ஒலி, செல்வீச்சுக்கள் அக்கால துப்பாக்கிகளின் குண்டு துப்பும் ஓசை, தெறிக்கும் சன்னங்கள், வீழ்ந்து வெடிக்கின்ற செல் ஓசை, உயரத்தில் குரல் எழுப்பும் சுடலைக்குருவி என பாடல்கள் எதுவுமில்லாது ஒரு கால கட்டத்தில் ஓயாது கேட்ட போர்க்கால ஒலிகளையும் நீண்ட மௌனமான இடைவெளிகளையும்,குறுகிய வார்த்தைகளையும் என அனைத்தினூடாகவும் அகக் கண்ணினால் ஒரு யுத்த களத்தினை இப்படத்தில் தரிசிக்கச் செய்கின்றார் இயக்குநர்.

### ஆவணச்சுவடு

நினைவுகளை மறந்துவிடாது பேணுவதற்கு கலைவடிவங்களை விடச் சிறந்த ஊடகங்கள் அமைய முடியாது. கலை இலக்கியங்கள் கடந்த கால வாழ்வின் சுவடுகளாக அமையும் போது அவை நினைவுகளைப் பேணுவதுடன் அவைபற்றிய மதிப்பீடுகளையும் காலப் பதிவுகளையும் தருகின்றன. இந்தச் செயன்முறை கலையொன்றின் சமூகப் பெறுமானத்தினை மையப்படுத்தியதாக அமைந்துவிடுகின்றது. எழுத்து ஆவணத்தினை விடக் காட்சி ஆவணமானது தாக்கவன்மையானது. ஈழத்தின் இறுதி யுத்தகால வரலாறு காலநகர்வில் நின்று மறதிகளால் மறைந்துபோகின்ற நிலையில் இன்றைய இளஞ்சமூகம் அந்த உணர்வுகளைப் பெற்றிருக்காத சூழலில் அதனை பதிவுசெய்து நினைவுபடுத்துகின்ற மிகமுக்கியமான ஆவணமாக இது திகழ்கின்றது. இந்த யுத்த வரலாற்றில் எமது இனம் கொடுத்த விலை, போரலைக்குள் எதிர்கொண்ட சவால்கள் உயிர்காவு எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள்,என அந்தக் காலத்தின் வரலாறு ஆவணமாக வெந்து தணிந்தது காடு திகழ்கின்றது.

### கலைத்துவப் படைப்பாக்கம்

கலைத்துவமாகச் சினிமா மொழியினை விளங்கிக்கொண்ட இயக்குநர் மதிசுதா ஐபோனின் கண்களுக்குள்ளால் இக்கலையைப் படைத்தது மட்டுமன்றி ஒரு துன்பியல் காவியமாக அமைகின்ற திரைப்படத்துக்குள் சிறிய காதல், துயரிலும் எழக்கூடிய நம்பும் படியான நகைச்சுவை, மனதை அலைக்கழிக்கும் எதிர்பார்க்கை நிலை கதையைப் படிப்படியாகக் கட்டமைத்து உச்சத்தினை நோக்கி நகர்த்திய முறைமை என அனைத்துக்கூடாகவும் அவர் ஒரு சிறந்த இயக்குநராக வெளித்தெரிகின்றார், காட்சிக் கூறுகளுக்குள் குறியீடாகப் பல பேசாப்பொருள்களைப் பேசுகிறார். எடுத்துக்காட்டாக குண்டு வெடிப்புக்களுடன் விறுவிறுப்பாகத் தொடங்கும் திரைப்படம் போரின் வெம்மையின் ஒரு அடையாளமாகத் தகிக்கும் ஒரு பதுங்கு குழியைக்காட்டுதல். உச்சக்கட்டத்தில் எரியும் நெருப்பு, அதனைத் தணிக்கும் மழை நீறு பூத்த நெருப்பாக அதே பங்கர். அதற்குள் மண்ணின் ஆத்மாவான அந்தத் தாய், பிணங்களுக்கு நடுவிலும் காப்பாற்றப்படுகின்ற குழந்தை, குடும்பங்களின் சிதைவும் மலர்வும் ஒரே நேரத்தில் நிகழ்கின்றமை எனப் பலவற்றையும் கூறலாம். எமது மண்ணின் நம்பிக்கைக்குரிய இயக்குநராக மதிசுதா உயரத் தெரிகின்றார்.

மொத்தத்தில் போர்க்காலத்தில் யுத்த வரலாற்றினை அதன் வெற்றி தோல்விகளைப் பலரும் பேசி இருக்க வெந்து தணிந்தது காடு அதற்குள் நசியுண்ட மக்களின் உண்மைச் சரித்திரத்தினை பொய்யின்றிப் படம் பிடித்துள்ளது. மக்களின் வியாகுலங்களும் பாடுகளும் காட்சியாக மிளிரும் இத் திரைப்படத்தினைக் காண்பவர்கள் ஒவ்வொருவரினதும் கண்கள் பனிப்பதும், இதயம் கனப்பதும் தவிர்க்க முடியாத விளைவுகளாக வுள்ளன. இதனைப் பார்த்தல் ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரினதும் வரலாற்றுக்கடமை.

# இன்னுமொரு தவக்காலமா?



நாட்டில எதோ பொருளா தாரப் பிரச்சினை தலை தூக்கி ஆடுது. எதோ மூச்சுப் பிரச்சினை எண்டு கொரோனா நோய் அறிகுறியாம் என் றெல்லாம் பயத்தை ஏற்படுத்துறாங்க, இன்னும் தேர்தல் கூட நாட்டை யோசிக் கச் செய்யுது. எரிபொருள் விலை எல்லாம் கூடிறது, இன்னும் என்னெல்லாம் கூடி விடுமோ என்று யோசிக்கத் தோணுது. எங்கட குடும்பங்களும் எதோ ஒருவிதத் தில சுய நலம் நிறைந்தவங்களாகவே இருந்துவிடுகிறோம். பல இடங்களில் உணவுக்கே வழி இல்லாம படிப்பைப் பாதியிலே நிறுத்திவிட்ட குடும்பங்கள், இன்னும் சில குடும்பமாகவே தற்கொலை செய்து வாழ்க்கையை தீர்மானித்துவிடு கிறார்கள். எல்லாமே ஸ்தம்பிதமடைந்து குடும்பத்தின் சில செயற்பாடுகள் உறங்கிக் கொண்டுதான் இருக்கிறது. ஒரு நாளைக்கு ஒரு நேரம் சாப்பிடுகிற குடும்பங்களும் இப்பொழுது உருவாகிவிட்டாங்க - கார ணம் உங்களுக்கு தெரியும். இதற்குள்ள சினிமா துறையில இன்னும் வருமானங் களைத் தருகிற மாதிரி புதிய புதிய படங் கள் வந்துகொண்டுதான் இருக்கிறது. படங்களையும், சீரியல் நாடகங்களை யும் பார்த்துப் பார்த்து கதாப்பாத்திரங்க ளாகவே மாறிவிட்டோம்.

கனவு கண்டு கனவு கண்டு களைத்து போனோம்,
இன்னும் கடல் ஆழம் காணவில்லையே என்று கவலைப்படுகிறோம்.
பசி என்று பசி என்று பறித்துப் பார்க்கிறோம்,
பாமரரை இன்னும் பஞ்சத்திலே தள்ளி விடுகிறோம்.
ஏலேலோ பாட்டுப்பாடி அறுவடசெய்ய
அடைமழை தான் வந்து போனதே அந்தோகதி,
கொஞ்சம் நிமிர்ந்து தான் எழ முடியல்ல
எதோ ஒரு தொல்ல என்ன வந்து வாட்ட
எங்க போய் சொல்லுவதோ தெரியல்ல
இன்னும் வாயடைத்து நிக்கிறமே.
உயிரும் மெய்யும் தான் இருக்குது இங்க,
வாழ்க்கை எப்படி போகுமோ இன்னும் தெரியல்ல...

இரண்டு பூசை வச்சு களைத்து போய், கதிரையில உக்கார்ந்திருந்து என்னுடைய தொலைபேசியில எதாவது தகவல் வந்திருக்குமா என்று பார்க்க தோணும் போது, 'பாதர், ஒருக்கா ஆசீர் வதித்து விடுவிங்களா, இரண்டு நாளாகச் சுகமில்ல' என்று ஒரு தாய் தன் மகளை கூட்டிக்கிட்டு வந்தா. முகத்தப் பார்த்தன், வாடிப்போய் இருந்தாங்க, 'டெங்குக் காச்சல் போல', என்று சொல்ல, 'ஆஸ்பத் திருக்கு போகலாமே' நான் கேட்க 'ரத்தம் குடுத்திருக்கு பாதர்' என்று கதை நீண்டுகொண்டே போனது. களைப்பு மறந்து கதையில மனம் போனது அவர்களுக்கு ஆறுதலா இருந்ததை நான் அவதானித்தேன். ஒருபக்கம் பசி, ஒருபக்கம் நோய் - ஒருபக்கம் வாழ்வு ஒருபக்கம் சாவு. இவ்வளவு விரைவாக எமது மனங்கள் சலிப்படையச் செய்யும் அளவிற்கு நிலைமைகள் மாறிவிட்டதே. இன்னும் கொண்டாட்டங்களும், திருவிழாக்களும் அதிகரித்துக்கொண்டே தான் இருக்கிறது. சுண்டல் கடலையும், புரியாணிச் சாப்பாடும் நாளும் நாக்கை சுவை காணச் சொல்லுது. கடவுளையும், விழாக்களையும் பிரித்துப்பார்த்தால், மனித ஆன்மீகம் என்ன கெட்டுவிடும்? எமது கொண்டாட்டங்கள் தற்கொலைக்குத் தீர்வாகிவிடுமா? ஒரு நேரச் சாப்பாட்டிற்கு விடைசொல்லுமா? அண்மையில் முக நூலில் ஒரு விவசாய இயந்திரத்திற்குப் பின்னால் எழுதப்பட்டிருந்த கனமான வார்த்தைகளைப் படித்தேன். 'இனிவரும் எதிர்காலத் தலமுறையினருக்கு கிரிகட்டுக்கு பதிலாக விவசாயத்தைச் செயற்படுத்தக் கற்றுக்கொடுங்கள். எனென்றால் கிரிக்கட் இன்னிங்ஸ் ஐ தரும், விவசாயம் பசிக்கு உணவைத் தரும்' என்று.

இந்தச் சூழ் நிலையில், இந்த சிந்தனைத் தொகுப்பில், நாம் தொடங்கி யிருக்கும் தவக்காலம் பற்றிச் சிந்திக்க லாம். நமக்கு என்ன கோவில்? நமக்கு என்ன கடவுள்? என்று கொரோனா நோயால எல்லாரும் முடங்கிப் போய் வீட்டில இருந்து தொலைக்காட்சியில் பூச பார்த்து இப்ப கோவில் பக்கமே தல வச்சு படுக்காதவங்களுக்குத் தவக்காலம் வந்தா என்ன, பொதுக்காலம் வந்தா என்ன? இந்த நாடும், இந்த நாளும் தராத மாற்றமா இந்தத் தவக்காலம் தரப்போகுது. மனசுபடுகிற வேதனைக்குத் தவக்கால உண்டியலா? ஒரு நேரமும் ஒழுங்கான சாப்பாடே இல்ல, பிறகென்ன உபவாசம், ஒருசந்தி? கோவில் கணக்கு இன்னும் பல குடும்பங்களுக்கு சுமை தான். உண்மைதான், எங்கட மனங்கள் இன்னும் அலைபாய்ந்துகொண்டு தான் இருக்கிறது. இன்னும் ஒருநிலைப்படுத்த எந்த உத்திகளும் இல்லாமல் போனது போல. அதைத் தவக்காலம் என்று ஏன் நாங்கள் யோசிக்கக் கூடாது?வாழ்வுக்குக் கான ஓர் அடையாளம் என்று ஏன் நாம் ஏற்க முடியாது. ஒவ்வொரு நாளும் எட்டு,

அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி

பத்து மணித்தியாலம் வேலை செய்கிற வங்க, நாம் தூங்கும் போது கண்விழித்து வாகனம் செலுத்துபவங்க,நோயாளியை பராமரிப்பவங்க, சுமையை முதுகில் நாளும் சுமப்பவர்கள், எத்தனையோ தொழிற்சாலைகளில் இரவு பகல் தெரி யாமல் வேலை செய்பவர்கள் என இப்படி எவ்வளவோ மனிதர்கள் வலித்தும் வலிக்காதவர்கள் போல, அழுதும் அழா தவர்கள் போல எமது சமூகத்தில் இருக் கிறர்களே. அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் தவக்காலம் தான்.

இந்தத் தவக்காலம் என்ன சொல்லப் போகுது? வழமையாக, இது ஒரு புதுப்பித் தல் காலம் என்றும், மனமாற்றத்தின் காலம் என்றும், இறைவனோடு பய ணிக்க அழைக்கும் காலம் என்றும் தானே சொல்லப் போகுது. இதை விடப் புதுசா ஏதும் இருக்கா என்று எம்முள் பலர் கேட்கலாம். மத்தேயு நற்செய்தியில் 'மனி தர் உலகம் முழுவதையும் ஆதாய மாக்கிக்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?' 16:26 என இயேசு சொன்ன வார்த்தைகள் இந்த தவக்காலத் தின் மிக முக்கியமான கூற்றாக அமைந்து விட்டது. உலகம் தந்த செல்வங்கள் என்ன, சந்தோசங்கள் என்ன, வெற்றிகள் என்ன, திறமைகள் என்ன? இவற்றில் எல்லாம் இறைவன் கொடுத்த வாழ்க்கை தொலைந்து விட்டால் எனது முடிவு?

**1.** தவக்காலத்தில் கற்கவேண்டியவை என்று புதிது புதிதாக எவையும் உருவா-வது இல்லை. ஒவ்வொரு வருடமும் இக்காலம் வந்துதான் போகுது ஆனால் உலகின் போக்கோடு எனது போக்கு மாறுபடுகின்றதா? சேர்ந்துபோகின்றதா? உலக விழுமியங்களும், கிறிஸ்தவ விழுமியங்களும் ஒன்றல்லவே. ஆயர் யோசப் பொன்னையா, அருட்பணி வாழ்வு பற்றிக் குருத்துவ திரு நிலைப்படுத்தல் திருப்பலியின் போது ஆற்றிய மறையுரை யில் அழகாகக் கூறியிருந்தார், 'இளம் அருட்பணியாளர்கள் எதார்த்தமாக வாழும் இக்காலத்து இளைஞர்களோடு தங்களை ஒப்பிடுவதுண்டு. இளமைத் துடிப்போடு இருக்கவேண்டும், நண்பர்களோடு நேரத்தைச்செலவிடவேண்டும், நவீன அறி வியல் தொலைத்தொடர்பு கருவிகளைப் பயன்படுத்தவேண்டும், நல்ல ஆடைகளை அணிந்துகொள்ளவேண்டும், சுவையான உணவு உண்ணவேண்டும், போதுமான ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும் - சரி, இவை அனைத்தும் நல்லதுதானே. ஆம் அனைத்தும் நல்லதுதான் தவறில்லை. ஆனால் நானும் அவர்களும் ஒன் றல்லவே! எனது பொறுப்புக்களும் அவர் களது பொறுப்புக்களும் ஒன்றல்லவே! எனக்கு கொடுக்கப்பட்ட ஆசியும் அவர்கள் விரும்பித்தேடுகின்ற வாழ்க்கையும் ஒன்றல்லவே! ஒரே உலகம், ஒரே வாழ்க் கைச் சூழல் ஆனால், அழைப்புக்கள் வெவ்வேறானவை'. இது கிறிஸ்தவர்க ளாகிய எமக்கும் சாரும். இந்தத் தவக் காலத்தில் எனது வாழ்வையும் பிறர் வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்ப்பதும், இவ்வுல கம் தருகின்ற விழுமியங்களை நியாயப் படுத்துவது தவறானது. எனது வாழ்வில் அன்பு செய்யவேண்டும், உதவி செய்ய வேண்டும், அரவணைக்கவேண்டும் ஆனால் நிபந்தனைகள் இருக்கக் கூடாதே, எதிர்பார்ப்புக்கள் இருக்கக் கூடாதே. தவக் காலம் எனது தவறுகளைச் சுட்டிக்காட்டி னால், அக்காலம் எனக்கு அர்த்தம் தான்.


**2.** தவக்காலத்தில் மாத்திரம் தான் சிலுவைப்பாதை செய்வது, யாத்திரை செல்வது உபவாசம் இருப்பது அதிகம் விரும்பப்படுகிறது - இது வேவ்வேறான காலங்களிலும் செய்ய திரு அவை அனு-மதி தருகின்றது. ஆனால் இக்காலத்தில் செய்வது அதிக அர்த்தத்தைத் தருகின்றது. இயேசுவின் பாடுகள் மரணம் இறப்பைப் பற்றிய பாஸ்கா மறைபொருளை சிந்திக் கின்றோம். இக்காலத்து தலைமுறை வழி பாடுகளில் அதீத நாட்டங் கொள்வதில்லை. நேரத்திற்கு பூசை முடிக்கனும், வழிபாடு அதிக நேரம் இருக்கக்கூடாது, பெருநாள் எல்லாம் கொண்டாட்டமா இருக்கனும், ஆடலும், பாடலும் ஒரே குஷி தான். பூசைப் பாடல் கூட சினிமாப் பாடல்களை மிஞ் சாதே, அவ்வளவிற்கு இரண்டுமே பொருந்த மாகத் தான் இருக்கிறது என்றால், துயரத் தைக் சிந்திக்க, தியானிக்க தூண்டும் தவக்காலம் எம்மாத்திரம், பல மணி நேரம் யாத்திரை செல்லும் நிலையெல் லாம் நிச்சயம் சாத்தியம் இல்லை. இவற்றையெல்லாம் நிறைவேற்றுகின்ற பக்தர்கள் இருக்கின்றார்கள் அதேநேரம் ஒரு நாள் கிறிஸ்தவர்களும் இருக்கின் றார்கள். இவர்களுக்கு இந்த தவக்காலம் என்ன சொல்லப் போகுது. 'நீ மண்ணாய் இருக்கின்றாய், மண்ணிற்கே திரும்புவாய்'.

**3.** மிக இலகுவாக மயக்கக் கூடிய சில விளம்பரங்களை நாம் பார்க்கிறோம். உதாரணமாக, 'உங்கள் சருமத்தின் கறுப்பு நிறம் நீங்கி சிகப்பழகு பெற இதோ புதி தாய் பயன்படுத்துங்கள் - ஐந்தே நிமிடங் களில்', என்று அழகான படங்களால் கவரச்செய்து விளம்பரப்படுத்தும் போது, அலை அலையாய் சென்று வாங்கிப் பலர் ஏமாந்த கதைகள் எமக்கு ஞாபகம் வரும். இதே போல தான் ஒரு நாள் ஒரு பங்குக் குரு, விளம்பரம் ஒன்றை தன்னுடைய மக்களுக்குக் கொடுத்தார். 'சுத்தமாய் இரு, சுமையைத் தாங்கு, கடைசி வரை மனிதனை மறவாதே - உனக்கு வாழ்வு நிச்சயம்'. பங்கு மக்களுக்கு எதுவுமே விளங்கவில்லை. விளக்கம் கேட்டார்கள், விளம்பரம் சுவாரஸ்யமாக இல்லையே, கவர்ச்சி இல்லையே, அதிலே தொழில் தர்மம் இல்லையே. குருவானவர் சொன் னார், 'இது தான் வாழ்வுக்கான இரகசி யம்'. வாழ்வில் தூய்மையாய் இருப்பதே ஒரு போராட்டம். எல்லாரும் தூய்மை யாய் இருந்தா கடவுளைக் காண்பது மிக இலகு தானே. சுமையைத் தாங்கு என் பது, எமது வாழ்வை நாம் தான் தாங்கிக் கொள்ளவேண்டும். பொருளாதார பிரச் சினை வந்தால் என்ன, கொரோனா நோய் வந்தா என்ன, எங்கட வாழ்வை நாங்கள் தானே சுமக்க வேண்டும். எதையும் தாங் கும் திடன் வேண்டும். இறுதியாக நாம் யாரை மறக்க வேண்டும் என நினைக்கின் றோமோ, அல்லது யார் நமக்குத் தொலை வில் இருக்க நினைக்கின்றோமோ அவர் களை மறக்கக்கூடாது. இது தான் இந்தத் தவக்காலத்தின் 'முதல் வாக்கு' முத்தான வாக்காக இருக்கட்டும். 'சுத்தமாய் இரு, சுமையைத் தாங்கு, கடைசி வரை மனி தனை மறவாதே - உனக்கு வாழ்வு நிச்சயம்.

எமது வாழ்வின் நிலைகள், சந்திக்கும் போராட்டங்கள் மாறுவதில்லை உலகம் தரும் சுமைகள்எப்பொழுதும் இருக்கின்றன ஆனால், இவைகளால் எமது வாழ்வை இழந்துவிடக்கூடாது. இந்த தவக்காலம் இதை உணர்த்த வேண்டும்: 'மனிதர் உலகம் முழுவதை யும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?' இந்த தவக்காலம் உங்களுக்கு அர்த்தமுள்ளதாய் அமையட்டும்.

## உன்னதமான காலம் தவக்காலம்

எம் பாவங்களைப் போக்க தன்னையே பலியாக்கி
கடவுளின் திருவுளம் நிறைவேற்றிய - எம்
கடவுளின் மகனாம் இயேசுவின் பாடுகள் : மரணம்
கனிவோடு எண்ணிப்பார்க்கும் காலம்...!



ஆராரோ என்று தாலாட்டுப்பாடி அரவணைத்த
அன்பு மகன் சிலுவையிலே அடித்துக் கொன்றபோதும்
ஆண்டவர் திருவுளம் அறிந்து அமைதியோடு இருந்த
அன்னைமரியாளின் தியாக உள்ளத்தை
எண்ணிப் பார்க்கும் காலம்!

செப, தப, ஒறுத்தல் வாழ்வால் எம் பாவங்களும்:
பிறரன்புப் பணிகள் மூலம் எம் வாழ்வும் மாற்றமடைய
குறைவற்ற செல்வனாம் எம் இயேசு வழிநடந்து
குவலயத்தில் நாம் குறைவின்றி வாழ
எமை அழைக்கும் காலம்

ஏழைகளை, வறியவர், கைவிடப்பட்டோரைத் தேடிச் சென்று
அவர்கள் வாழ்வு மலர பல உதவிகளைச் செய்து
உத்தமனாம் இயேசுபிரான் காட்டிய உண்மையின் வழியில்
உவப்புடன் வாழ்ந்திட அழைப்பு விடுக்கும் காலம்!

உண்மைக்காய் குரல் கொடுத்து உயிர் நீத்த - எம்
உத்தமனாம் இயேசு வழி நின்று
உலக மாயைகளை வென்று இருள் போக்கி ஒளியேற்றும்
உன்னத காலமாம் தவக்காலத்தில் நாம்
உவப்புடன் வாழ்வோம்...!

*அ.ஜஸ்மின் ஷரோன்*

# துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்பணியாளரும் உருத்திரபுரம் பங்குத் தந்தையுமான போல் அனட்கிளிட் அவர்களின் அன்புத் தந்தை **திரு மாரிமுத்து அருச்சுணன் அருள்** அவர்கள் கடந்த 01.03.2023 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## அமதிகளின் புதிய...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக் அடிகள் கடந்த காலங்களில் புனித பிரான்சிஸ்கு சவேரியார் பெரிய குருமடம், யாழ். பல்கலைக்கழகம், ஆசிரியர் கலாசாலை என்பற்றில் விரிவுரையாள ராகவும் ஆன்மீகக் குருவாகவும் பணியாற்றிக் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக நோர்வே நாட்டில் மறைபரப்பாளராக பணியாற்றியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. புதிய மாகாணத் தலைவரையும் அவரது உடன் ஆலோசகர்களையும் பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## நீங்காத நினைவுகளில் 9ம் ஆண்டு

மண்ணில்
23 . 11 . 1935



விண்ணில்
15 . 03 . 2014

### அமரர் அருளானந்தம் திரேசம்மா

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
உம் நினைவுகள் எம் இதயத்திலிருந்து
என்றும் மறையாது அம்மா
எம் இதயமென்னும் கோவிலிலே
தெய்வமாய் நிறைந்திருக்கும்
எங்கள் அன்பு அம்மா
அரவணைக்க எத்தனை கரங்கள்
இருந்தாலும் உங்கள் அன்புக்கரம்
தேடி அலைகிறோம் அம்மா!
அம்மா என்று அழைத்திட
எமக்கு யாருண்டு இவ்வுலகினில்
புன்னகை பூத்த உங்கள் திருமுகம்
எப்போதும் எங்கள் மனதை விட்டகலாது
பரகதியில் உங்களோடு பப்பாவையும்
சேர்த்துக் கொள்ளுங்கள்...
உங்கள் இருவரது ஆசியுடனும்
நீங்கள் எப்போதும் எங்களோடு
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்
என்ற நம்பிக்கையில் இவ்வுலகில்
நாங்களும் வாழ்கின்றோம்...
இவ்வுலகில் நாம் உள்ளவரை
உங்களிற்காக உங்கள் ஆன்மா
அமைதியாக இறைப்பாறவும்
வேண்டிக் கொள்வோம்

35/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

AD-20

நினைவுகளுடன்
பிள்ளைகள் , மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

## விண்ணக வாழ்வின் 60ம் நாள் நினைவு

மண்ணில்
01 . 06 . 1937



விண்ணில்
21 . 01 . 2023

### அமரர் யோவான்பிள்ளை அல்விறெற்றம்மா

இவரின் ஆன்ம இளைப்பாற்றி வேண்டி 21.03.2023 செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு மணியம்தோட்டம் கர்த்தர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

133 -3ம் குறுக்கு வீதி,
மணியம்தோட்டம்.
0778525347

AD-19

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வில் 4ம் ஆண்டு நினைவுகளில்

பிறப்பு
24 . 10 . 1966



இறப்பு
09 . 03 . 2019

### அமரர் யோசவ் அன்ரன் லியோ அன்ரசன்

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோ.14:8)

காலங்கள் கடந்து சென்றிடினும்
உங்களின் அன்பையும், பாசத்தையும்
இரக்கத்தையும், நகைச்சுவைப் பேச்சையும்
மறக்க முடியவில்லை அப்பா!
உங்கள் ஆன்மா இறைவனடி
அமைதி காண இறைஞ்சுகின்றோம் நிதமும்.

07.03.2023 இவரது ஆன்ம இளைப்பபாற்றிக்காக மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை 5.00 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நல்லாயன் வீதி, சில்லாலை.

AD-21

உங்கள் நினைவுகளூடன்
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரி, உறவுகள்

## விண்ணக வாழ்வின் 3ம் ஆண்டு நினைவு

மண்ணில்
22 . 08 . 1942



விண்ணில்
11 . 03 . 2020

### அமரர்
### பரமேஸ்வரி செல்வராசா

174, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

AD-18

என்றும் உங்களுக்காக
இறைவனிடம் பரிந்துரைக்கும்
அன்புச் சகோதரர்கள், பிள்ளைகள்
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வின் 3ம் நாள் நினைவு

மண்ணகம் வந்தது
30 . 20 . 1946



விண்ணகம் சென்றது
16 . 02 . 2023

### அமரர் சில்வேஸ்ரர் குளோட்டில்டா
(ராணி)

'உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்' (யோவான் 11:25)

குடும்பத்தின் குலவிளக்கே
கூடிக்களித்த உறவுகளை
தூர இடம் விட்டுச் சென்றதேனோ
உமது பிரிவால் வாடி நிற்கின்றோம்
நீர் இறைவனுடன் இன்புற்று
பேரின்ப வீட்டில் பேரின்பமாய் வாழ்வீராக

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 18.03.2023 சனிக்கிழமையன்று பின்வரும் ஆலயங்களில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.
Nirtre - Dame Pontoise - France, புனித யாகப்பர் ஆலயம் - யாழ்ப்பாணம், புனித அடைக்கல அன்னை ஆலயம் - ஆனைக்கோட்டை, புனித லூர்து அன்னை ஆலயம் - லண்டன். புனித திரேசாள் ஆலயம் - நியூசிலாந்து

இல.223 பீச் றோட், குருநகர்
Pontoise, France

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## நிஜம் நிழலாகி 1ம் ஆண்டு நினைவு

வையத்துள்
29 . 08 . 1944



தெய்வத்துள்
18 . 02 . 2022

### அமரர் ஜோசேப் மரியதாசன்
(செல்லத்துரை)

*இயேசுவே உமது திருக்காயங்களினூடாக*
*எமது தந்தையை நோக்கி உமது*
*அளவில்லாத நன்மைத்தனத்தை அவர்*
*ஆன்மாவிற்கு வழங்கியருளும்.*

இளவாலை, மேற்கு
இளவாலை

குடும்பத்தினர்

# இத்தாவில் புனித பார்பரா அன்னை ஆலயத்திற்கு அடிக்கல்



கிளிநொச்சி பளை இத்தாவில் பிரதேசத்தில் யுத்தத்தால் சிதைவடைந்திருந்த புனித பார்பரா அன்னை ஆலயம் புதிதாக அமைக்கப்படவுள்ள நிலையில் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஜோர்ச் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் கியுடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை யூயின் பிரான்சிஸ் அவர்களும் மற்றும் குருக்கள் துறவிகள் இறை மக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நூற்றாண்டு காலம் பழமைவாய்ந்த இவ்வாலயம் அப்பிரதேசத்தில் நீண்டகாலம் நடைபெற்ற யுத்தத்தில் பலதடவைகள் அழிவுற்றிருந்தாலும் அப்பகுதி மக்களின் விடா முயற்சியால் மீண்டும் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுவந்த நிலையில் தற்போது புதிய ஆலயம் உள்நாட்டு வெளிநாட்டு மற்றும் நலன்விரும்பிகளின் உதவியுடன் அமைக் கபடவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருவாளர் சின்னராசா காலமானார்



கனடா றொறன்ரோ நகரில் வசித்துவந்த திரு. அன்ரன் பிலிப் சின்னராசா அவர்கள் சுகவீனமுற்ற நிலையில் கடந்த மாதம் 26 ஆம் திகதி இறைபதம் அடைந்துள்ளார்.

திருவாளர் சின்னராசா அவர்கள் கனடாவிலிருந்து வெளி வரும் கானகத் தூது எனும் சஞ்சிகையின் ஆசிரியர் ஆவார். தமிழ்ப்பற்றுக் கொண்டவராகவும், ஈழத்துத் தமிழர்களின் விடுதலைக்காக என்றும் குரல் கொடுத்து வந்தவராகவும், துயருறும் ஈழத்துத் தமிழர்க ளுக்கும், புலம்பெயர் வாழ் கத்தோலிக்க சமூகத்திற்கும் பெரும் உதவி புரிந்தவராக வாழ்ந்துள்ளார். பாதுகாவலன் பத்திரிகையின் வாசகராகவும் விமர்சகராகவும் வாழ்ந்த அவரின் ஆன்மா இறைவனில் நித்தியத்தில் இளைப்பாற மன்றாடுகின்றோம்.

# பிரான்சிஸ்கன் 3ம் சபையின் புதிய நிர்வாகம்

புனித பிரான்சிஸ்கன் 3ஆம் சபை, பொதுநிலையினர் குழுமத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த மாதம் 20ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயப் பங்குப் பணி மனையில் நடைபெற்றது. சபையின் ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை அருள்தாசன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராலயப் பங்குத்தந்தை அருட் தந்தை மவுலிஸ் அடிகள் கலந்துகொண்டார்.

புனித பிரான்சிஸ்கன் 3ஆம் சபை, பொதுநிலையினர் குழுமத்தின் புதிய மறைமாவட்ட தலைவராக திரு பிரான்சிஸ் றெஜி றெஜினோல்ட் அவர்களும் செயலாளராக திருமதி ஜெயமலர் சற்குணராஜா அவர்களும் அவர்களுடன் இணைந்து ஏனைய நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமாத் தேர்ச்சி



முல்லைத்தீவு சிலாவத்தைப் பிரதேசத்தில் கப்புச்சியன் சபையினரால் நடாத்தப்பட்டுவரும் கப்பிரல் கம்பஸ் தகவல் தொழிழ்நுட்பக் கல்விக்கூடத்தில் டிப்ளோமா கற்கைநெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வு கடந்த மாதம் 25ஆம் திகதி நடைபெற்றது.

தொழிழ்நுட்பக் கல்விக்கூடத்தின் இயக்குநர் கப்புச்சியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை டேவிட் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சியை நிறைவு செய்த பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார்.

# பாஷையூரில் சாதனையாளர்கள் கௌரவிப்பு



பாசையூர் பங்கில் கல்வி மற்றும் விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்த மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாசையூர் தண்டர்ஸ் கழகத்தினால் முன்னெடுக்கபட்ட கௌரவிப்பு நிகழ்வு கடந்த 26ஆம் திகதி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அடிகளார், அருட்தந்தை ஜஸ்ரின் அடிகளார், முன்னாள் பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் குலசேகரம் பெர்னாண்டோ வெலிச்சோர் மிக்கேல் மற்றும் முன்னாள் தண்டர்ஸ் கழகத் தலைவர் பிரான்சிஸ் யூட் கொலின் ஆகியோர் கலந்து சிறப்பித்து மாணவர்களைக் கௌரவித்தார்கள்.

# புதுக்குடியிருப்புப் பங்கில் மகாஞானொடுக்கம்



புதுக்குடியிருப்புப் பங்கில் முன்னெடுக்கப்படுகின்ற மகா ஞானொடுக்கத்திற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த 19ஆம் திகதி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது.

அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களின் வழிநடத்தலில் ஒன்றித்து ஒளிவீசு எனும் கருப் பொருளில் முன்னெடுக்கப்படும் இம்மகாஞானொடுக்கம் எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்புப் பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அடிகளின் ஒழுங்குபடுத் தலில் நடைபெற்று வரும் இந்நிகழ்வில் பங்கு மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வரு கின்றனர்.


# சுண்டுக்குளி மறைக்கல்வி மாணவர்களின் சுற்றுலா



யாழ். சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய மறைக்கல்வி மாணவர்களும், பீடப்பணியாளர்களும் இணைந்து மேற் கொண்ட கள அனுபவச் சுற்றுலா கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை யேசுதாஸ் அடிகளின் ஒழுங் குபடுத்தலில் மாணவர்களின் அறிவியல் அறிவை மேம்ப டுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் தும்பளை புனித லூர்து அன்னை திருத்தலம், மணற்காடு புனித அந்தோ னியார் ஆலயம், வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள இந்து ஆல யங்கள், நிலாவரைக்கிணறு, சவுக்கங்காடு, மண் மேடுகள் போன்றவற்றைப் பார்வையிட்டதுடன் இப்பயணத்தில் அருட்ச கோதரிகள், மறையாசிரியர்கள், பெற்றோர்களெனப் பலரும் கலந்து பயனடைந்தனர்.

# பருத்தி மறைக்கோட்டப் பீடப்பணியாளர்கள் ஒன்று கூடல்



பருத்தித்துறை மறைக்கோட்டப் பீடப்பணியாளர்களால் மறைக்கோட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த மாதம் 16ஆம் திகதி தும்பளை புனித லூர்து அன்னை திருத்தலத்தில் நடைபெற்றது.

மறைக்கோட்ட இணைப்பாளர் அருட்தந்தை ஜோண் குரூஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந் நிகழ்வில் திருச்செபமாலைப் பவனியும், சிறப்புத்திருப்பலியும் தொடர்ந்து கருத்துரைகளும் குழுவிளையாட்டுக்களும் மகிழ்வூட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் அடிகள் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்ததுடன் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை வென்சென்ஸ்லொஸ் அவர்கள் கருத்து ரையும் வழங்க அருட்தந்தை டியூக் வின்சன் அவர்கள் நிகழ்வுகளை வழிப்படுத்தினார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அடிகள் மற்றும் பங்குகளிலிருந்து குருக்கள், துறவிகள், பீடப்பணியாளர்களென 400 வரையானவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.